# தேச பக்தி
DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:143 ★23.09.2026 ★தமிழ் நாளிதழ் ★புதன்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:143 ★23.09.2026 ★TamilDaily ★Wednesday ★Page-4 ★Price-₹5/- Chennai




தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் சூரிய ஒளி மின் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த மாவட்ட அளவிலான குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார் உள்ளார்.

## தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நொச்சியோடை பழங்குடியினர் குடியிருப்புகளுக்கான மாதிரி சூரிய ஆற்றல் பழங்குடியினர் கிராமத் திட்ட தொடக்க விழா

### மாவட்ட ஆட்சித்தலைவர்இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (22.09.2026) ஸ்ரீவில்லிப்புத்தூர் மேகமலை புலிகள் காப்பகம் (மேகமலை கோட்டம்) மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி (நபார்டு) இணைந்து நடத்திய நொச்சியோடை பழங்குடியினர் குடியிருப்புகளுக்கான மாதிரி சூரிய ஆற்றல் பழங்குடியினர் கிராமத் திட்ட தொடக்க விழா மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நொச்சியோடை என்பது ஸ்ரீவில்லிப்புத்தூர் மேகமலை புலிகள் காப்பகம் உட்பட்ட மேகமலை வனப் பகுதியின் மையப் பகுதியில் (CORE AREA) அமைந்துள்ள சுமார் 32 கி.மீ. தொலைவில் உள்ள தொலைதூர பழங்குடியினர் குடியிருப்பாகும். இக் குடியிருப்பில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 76 பேர் வசித்து வருகின்றனர். பல வருடங்களாக மின்சார வசதி இன்றி வாழ்ந்து வந்த இப்பகுதி மக்கள், வெளிச்சத்திற்காக மண்ணெண்ணெய் விளக்குகளை நம்பியிருந்ததுடன், கைப்பேசிகளை மின்னேற்றம் செய்யவும், அடிப்படை தகவல் தொடர்பு வசதிகளைப் பெறவும் வனப்பகுதிக்கு வெளியே நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருந்தது. இப்பழங்குடியினரின் உரிமைகள் வன உரிமைச் சட்டம் 2006ன் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களது நலனையும் வனப்பாதுகாப்பையும் ஒருங்கிணைக்கும் வகையில் நபார்டின் ஊரக உள்கட்டமைப்பு ஊக்குவிப்பு நிதி (RIPF) ஆதரவுடன் ரூ.25 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மாதிரி சூரிய ஆற்றல் பழங்குடியினர் கிராமத்திட்டத்தின் மூலம் 18 பழங்குடியினர் குடும்பங்களுக்கும் சூரிய ஆற்றல் அடிப்படையிலான மினிகிரிட்மின்சார வசதி, 36 சோலார்தெருவிளக்குகள், வீட்டு எல்.இ.டி. விளக்குகள், கைப்பேசி மின்னேற்ற வசதி, சமூகக் கூடம் மற்றும் பொதுப்பயன்பாட்டிற்கான தொலைக்காட்சி வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் தடையற்ற மற்றும் நம்பகமான மின்சார வசதியை வழங்குவதோடு, குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் இரவு நேர பாதுகாப்பை மேம்படுத்தியுள்ளது.

மேலும், சுற்றுச்சூழலுக்கு உகந்த இப்புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திட்டம், பழங்குடியினரின் வாழ்க்கைத்தரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. மின்சார வசதி கிடைத்ததன் மூலம் குழந்தைகளின் கல்வி வாய்ப்புகள் மேம்பட்டுள்ளதுடன், தகவல்தொடர்பு மற்றும் தகவல் அணுகல் அதிகரித்துள்ளது. சமூக ஒற்றுமை வலுப்பெற்றதோடு, வாழ்வாதார முன்னேற்றம் மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்வும் உயர்ந்துள்ளது. உயிரியல் பன்முகத் தன்மையைப் பாதுகாத்தபடி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை எவ்வாறு உருவாக்க முடியும் என்பதை எடுத்துக்காட்டும் சூழலியல்முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் நிலையான வளர்ச்சிக்கான வெற்றிகரமான முன்மாதிரியாக இத்திட்டம் திகழ்கிறது.

இத்திட்டத்தின் கீழ் சூரிய ஆற்றல் மினிகிரிட் அமைப்பு, 36 சோலார் தெரு விளக்குகள், வீட்டு மின் வசதிகள், சமூகக் கூடம் மற்றும் 50 அங்குலத் தொலைக்காட்சி வசதியுடன் கூடிய சமூக மையம் ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பழங்குடியினர் வாழ்வாதார மேம்பாடு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் இத்திட்டம் மாநில அளவில் ஒரு முன்மாதிரித் திட்டமாக உள்ளது. தொலைதூர பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு தூய்மையான மற்றும் நம்பகமான மின்சார வசதியை வழங்குவதன் மூலம் கல்வி, தகவல் தொடர்பு, பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை இத்திட்டம் ஏற்படுத்தும். மேலும், நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த மின்சாரவசதியை வழங்குவதன் மூலம் தொலைதூர வனப்பகுதிகளில்வாழும் பழங்குடியினரின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதோடு, நிலையான வளர்ச்சியையும் ஊக்குவிக்கும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

மேலும், மாவட்ட நிர்வாகம், நபார்டு மற்றும் வனத்துறையின் ஒருங்கிணைந்த செயல்பாட்டினை மாவட்ட ஆட்சித்தலைலவர் அவர்கள் பாராட்டினார்.

அதனைத்தொடர்ந்து, நொச்சியோடை பழங்குடியினர் குடியிருப்புப் பிரதிநிதிகள் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு, இத்திட்டத்தின் மூலம் கிடைத்துள்ள மின்சார வசதிக்காக மாவட்ட நிர்வாகம், நபார்டு மற்றும் வனத்துறைக்கு நன்றியைத் தெரிவித்தனர்.

முன்னதாக, நபார்டின் பழங்குடியினர் மேம்பாட்டு முயற்சிகளின் ஒரு பகுதியாக, பழங்குடியினர் உற்பத்தியாளர் நிறுவனம் (FPO) சார்பில் உருவாக்கம் மற்றும் மேம்பாட்டிற்கான □.27.30 இலட்சம் மதிப்பிலான ஒப்புதல் ஆணையினை,

அந்நிறுவனத்தின் இயக்குநர் குழு உறுப்பினர்களிடம் (BoDs) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்த பழங்குடியினர் உற்பத்தியாளர் நிறுவனம் தேன் சேகரித்து மதிப்புக் கூட்டுப் பொருளாக மாற்றி விற்பனை செய்வதோடு, காபி, மிளகு, ஏலக்காய் போன்ற பணப் பயிர்களையும் பழங்குடியினர் மக்களிடம் நேரடியாக கொள்முதல் செய்து அதனை மதிப்புக்கூட்டுப் பொருட்களாக மாற்றி வெளிசந்தைகளில் விற்பனை செய்யவும் திட்டமிடல் செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், துணை இயக்குநர் (ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம், மேகமலை கோட்டம்) திரு.விவேக் குமார் பி. யாதவ், இ.வ.ப., முதன்மை பொது மேலாளர் (நபார்டு, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி) திரு. மனோஜ், மாவட்ட வளர்ச்சி மேலாளர் (நபார்டு) மரு.ராபின்சன் ராஜா உட்பட பலர்கலந்து கொண்டனர்.

# மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் தபால் வாக்குகள் பெறும் பணிகள் தொடக்கம்

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளில் தபால் வாக்குகள் பெறும் பணிகள் தொடங்கியுள்ளன.

இரு தொகுதிகளிலும் வரும் அக்.6ம் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

இந்நிலையில், முதிய வாக்காளர்களிடம் தபால் வாக்குகள் பெறும் பணிகள் நேற்று தொடங்கின.

இதற்காக,மதுராந்தகம் தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலர் உத்தரவின்பேரில் 8 குழுக்கள் அமைக்கப்பட்டு 85 வயதுக்கு மேற்பட்டோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என 931 வாக்காளர்களிடம் தபால் வாக்குகளைப் பெற உள்ளனர்.

மேலும், சிறப்பு குழுவினர் 85 வயது மேற்பட்டநபர்களின் வீடுகளுக்குச் சென்று



வாக்குகளை பெறும் பணிகளிலும் ஈடுபட உள்ளதாக தேர்தல் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேபோல் தாராபுரம் தொகுதியில் மொத்தம் 1,236 பேர் தபால் வாக்கு செலுத்தத் தகுதி பெற்றுள்ளனர்.

தபால் வாக்குகளைச் சேகரிக்கும் பணிக்காக மொத்தம் 30 சிறப்பு வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, மண்டல வாரியாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாகனத்திலும் தலா 6 அதிகாரிகள் வீதம் மொத்தம் 180 தேர்தல்அலுவலர்கள் கொண்ட குழுவினர் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# பழைய சேலைகளை கொள்முதல் செய்ய ஒப்புதல் ராஜபாளையத்தில் நெசவாளர்கள் போராட்டம் ஒத்திவைப்பு

விருதுநகர் மாவட்ட கூட்டுறவு சங்கங்களில் இருப்பில் உள்ள 1.44 லட்சம் பழைய சேலைகளை கொள்முதல் செய்ய பேச்சு வார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டதை அடுத்து, ராஜபாளையத்தில் நெசவாளர்கள் நடத்தி வந்த தொடர் போராட்டம் ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு பகுதிகளில் தமிழக அரசின் பொங்கல் தொகுப்பு சேலை உற்பத்தி செய்யும் நெசவாளர்கள் புதிய ரக சேலைக்கு கூலி நிர்ணயம், வேலை இழப்புக்கு நிவாரணம், இருப்பில் உள்ள பழைய சேலை கொள்முதல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கஞ்சி தொட்டி, சாலை மறியல், பிச்சை எடுக்கும் போராட்டம் ஆகியவற்றின் தொடர்ச்சியாக ராஜபாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில் செப்டம்பர் 22ம் தேதி காத்திருப்பு போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, இன்று ராஜபாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட அதிமுக, திமுக, கம்யூனிஸ்ட் உள்ளிட்ட பல்வேறு கட்சி நிர்வாகிகளுடன் நெசவாளர்கள் ஊர்வலமாக



சென்றனர். அவர்களை காந்தி சிலை முன் போலீஸார் தடுத்து நிறுத்தியதால், ரயில்வே பீடர் சாலையில் நெசவாளர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, நெசவாளர்கள் போராட்ட குழுவினர் உடன் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஏ.எஸ்.பி ஸ்வப்நிலா அனில் சைந்தனே, வட்டாட்சியர் ராஜிவ்காந்தி, கைத்தறி துறை உதவி இயக்குநர் சேரன் ஆகியோர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இதில், புதிய ரக சேலைக்கு ரூ.250 கூலி நிர்ணயம் செய்ய கோரி வலியுறுத்தி உள்ளோம். கூலி நிர்ணய குழுவிலும் அதே கோரிக்கையை தெரிவித்துள்ளோம். இரு நாட்களில் கூலி நிர்ணயித்து அறிவிக்கப்படும். கூட்டுறவு சங்கங்கள் மற்றும் நெசவாளர்கள் வசம் உள்ள பழைய சேலைகள் கொள்முதல் ரூ.202 என்ற விலைக்கு கொள்முதல் செய்யப்படும். 29 கூட்டுறவு சங்கங்களில் இருப்பில் உள்ள 1,44,424 சேலைகள் கொள்முதல் செய்யப்படும்.

புதிய ரக சேலை உற்பத்திக்கு தறிகளில் செய்யும் மாற்றத்துக்கு ஆகும் செலவுக்கு கூட்டுறவு சங்கம் மூலம் ரூ.5 ஆயிரம் வழங்கப்பட்டுள்ள நிலையில், கூடுதலாக ரூ.5 ஆயிரம் வழங்கப்படும். அந்தநிதியை அரசு வழங்கும். 5 மாத வேலை இழப்புக்கு மாதம் ரூ.10 ஆயிரம் நிவாரணம் வழங்குவது குறித்து வழிவகை இல்லை. இதுகுறித்து அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது ஆகிய 4 கோரிக்கைகள் குறித்து எழுத்துபூர்வமாக கைத்தறி துறை உதவி இயக்குநர் உத்திரவாதம் அளிக்கப்பட்டது.

இந்தப் பேச்சுவார்த்தையில் போராட்டக் குழுதலைவர் சிவலிங்கம், திமுக நகரச் செயலாளர் ராமமூர்த்தி, அதிமுக நகர செயலாளர்கள் பரமசிவம், முருகேசன், சிஐடியு கைத்தறி சங்க மாவட்ட செயலாளர் ராமர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பேச்சு வார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டதை அடுத்து நெசவாளர்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

# “கள்ளுக்கான தடையை தவெக அரசு நீக்க மறுப்பது கொடுஞ்செயல்” சீமான் காட்டம்

அயல்நாட்டு மதுவை அரசு விற்கலாம்; நம் நாட்டுப் பனைத் தொழிலாளி ‘கள்’ இறக்கக் கூடாதா? கள்ளுக்கான தடையை தவெக அரசு நீக்க மறுப்பது பனை தொழிலாளர்களின் வாழ்வினை அழிக்கும் கொடுஞ்செயல்’ என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் காட்டமாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘தமிழ்நாட்டில் பனை மற்றும் தென்னை மரங்களிலிருந்து ‘கள்’ இறக்குவதற்கும் விற்பனை செய்வதற்கும் விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க முடியாது என்று சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தவெக அரசு பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்திருப்பது வன்மையான கண்டனத்துக்குரியது.

‘கள்’ தமிழர்களின் தொன்மையான வாழ்வியலோடும், பண்பாட்டோடும் இரண்டற கலந்ததாகும். பதநீர், பனங்கருப்பட்டி, பனைவெல்லம் உள்ளிட்ட பல்வேறு பனைப் பொருட்களை ஊக்குவிக்கும் அரசு, அதே பனையிலிருந்து பெறப்படும் கள்ளுக்கு மட்டும் தடையைத் தொடர்வது ஏன்?

தமிழ்நாட்டின் மாநில மரம் பனை என்பது தவெக அரசுக்கு தெரியுமா? தெரியாதா? ‘கள்’ போதைப்பொருள் என்றால், அரசு டாஸ்மாக்கில் விற்பது என்ன புனிதத் தீர்த்தமா? அரசு விற்கும் மலிவு விலை மதுதான் மக்களின் உடல் நலத்தைக் கெடுக்கிறதே அன்றி, நம் நாட்டு ‘கள்’ அல்ல; மது விற்பவர்களுக்கு சீருடை, ஊக்கத்தொகை கொடுத்து ஊக்குவிப்பதும், உணவகத்துடன் கூடிய மதுக் கூடங்களைத் திறப்பதும், இணையம் வாயிலாக மதுவிற்பனை செய்வதும்தான் தவெக அரசு மதுவை ஒழித்து மக்களைக் காக்கும் முறையா? அயல்நாட்டு மதுவை அரசு விற்கலாம்; நம் நாட்டுப் பனைத்தொழிலாளி ‘கள்’ இறக்கக்கூடாதா?

‘கள்’ உற்பத்தியில் கலப்படம் ஏற்படும் ஆபத்து மற்றும் விற்பனையை கண்காணிப்பதில் உள்ள சிரமங்கள் ஆகியவற்றை தமிழக அரசு தடைக்கான காரணங்களாக முன் வைத்துள்ளது வெட்கக்கேடானது.



உள்நாட்டு, வெளிநாட்டு மதுபானங்களின் விற்பனையையும், தரத்தையும் ஒழுங்குபடுத்த முடிகிற அரசால், ‘கள்’ உற்பத்தியை மட்டும் உரிய உரிமம், தரக்கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு முறைகளின் கீழ் கொண்டுவர முடியாதா?

கலப்படம் நடைபெறுகிறது, சட்டவிரோத விற்பனை நடைபெறுகிறது என்றால் அவற்றை அரசு தடுக்க வேண்டும். அதற்கு மாறாக, கள்ளுக்கு தடை விதித்து பனை தொழிலை நம்பி வாழும் பல்லாயிரம் மக்களின் வாழ்வாதாரத்தை முடக்குவது கொடுங்கோன்மை இல்லையா?

கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்காக அரசால் மலிவு விலையில் மது விற்க முடியுமென்றால், கலப்படக் கள்ளை தடுக்க, அரசால் தூய கள்ளை விற்க முடியாதா? கள்ளுக்குத் தடையை நீக்காமல், பனை விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்போம் என்று தவெக அரசு கூறுவது அப்பட்டமான ஏமாற்றாகும்.

பனை விவசாயிகள் பயன்பெறும் ‘கள்’ விற்பனைக்கு அரசு ஏன் செயல் திட்டம் வகுக்கக் கூடாது என்று உயர் நீதிமன்ற நீதியரசர்கள் கருத்துத் தெரிவித்திருந்த நிலையில், கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய மரணங்கள் குறித்து விசாரணை நடத்திய, ஓய்வுபெற்ற நீதியரசர் கோகுல்தாஸ் ஆணையமும் தனது ஆய்வறிக்கையில், இயற்கை பானமான ‘கள்’ விற்பனையை அனுமதிக்கப் பரிந்துரைத்தது. நாம் தமிழர் கட்சியும், பனைதொழிலாளர்களும் ‘கள்’ தடையை நீக்கப் பல ஆண்டுகளாக போராடி வருகின்றனர். ஆனால், அவற்றையெல்லாம் புறந்தள்ளி, தவெக அரசு கள்ளின் மீதான தடையை நீக்க மறுப்பது எதேச்சதிகாரத்தின் உச்சமாகும். ஆகவே,தமிழ்நாடு அரசு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தை உடனடியாக திரும்பப் பெற்று, பனைத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில் ‘கள்’ மீதான தடையை உடனடியாக நீக்க வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்’ எனத் தெரிவித்துள்ளார்.

# செய்யாறு விஸ்டம் வித்யாஷ்ரம் இன்டர்நேஷனல் சி.பி.எஸ்.இ பள்ளியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு

செய்யாறு,செப்.23

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு விஸ்டம் வித்யாஷ்ரம் இன்டர்நேஷனல் பள்ளியில் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் நேற்று நடைபெற்றது. விஸ்டம் கல்விக்குழும நிர்வாகிகள் என்.துரைராஜன், டி.ஜி.எம்.விஜயவர்மன் ஆகியோர்களின் அறிவுத்தலின்படி மாணவர்களுக்கு சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. செய்யாறு மோட்டார் வாகன ஆய்வாளர் பி.செந்தில் குமார் கலந்துகொண்டு, மாணவர்களிடம் 18 வயதிற்கு உட்பட்டவர்கள் இருசக்கர வாகனம் ஓட்டக்கூடாது, வாகனம் ஓட்டும் பொழுது குடித்துவிட்டு வாகனம் ஓட்டுதல் தவறு என்றும், தலைக்கவசம் அணியாமல் செல்லுதல் தவறு, வேகத்தடை உள்ள இடங்களில் மெதுவாக செல்ல வேண்டும், மக்கள் அதிகமாக உள்ள இடங்களில் மெதுவாக பயணிக்க வேண்டும், வாகனத்தில் பயணிக்கும்போது அலைபேசி பயன்படுத்த வேண்டாம் என்றும் பல்வேறு அறிவுரைகளை கூறினார். பத்தாம் மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு மாணவமாணவர்களுக்கு தேர்வு குறித்தும், தற்போது நீங்கள் மிக கவனமாக படிக்க வேண்டும் என்றும், அதிகமாக அலைபேசியில் நேரம் செலவிடுவதை தவிர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். தற்போது உலகம் மிக வேகமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே நாம்தான் ஒவ்வொரு விஷயத்திலும் மிக கவனமாக இருக்க வேண்டும் என்றும் கூறினார். நிகழ்ச்சியின் முக்கியமாக மாணவர்கள் சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு உறுதிமொழி எடுக்கப்பட்டது. நிகழ்ச்சியில் பள்ளியின் துணை முதல்வர்கள் எம்.வெங்கடேசன், பி.ஜெயச்சந்திரன், ஆசிரியர்களும் உடனிருந்தனர்



# சின்னமனூரில் அனுமதியின்றி தோண்டப்படும் தார்ச்சாலைகள்

## அதிகாரிகள் மெத்தனப்போக்கால் மக்கள் வரிப்பணம் வீண் என சமூக ஆர்வலர்கள் குற்றச்சாட்டு

தேனி மாவட்டம் சின்னமனூர் எள்ளுகட்ட பாதையில் அமைந்துள்ளதார்ச்சாலையை, நகராட்சி நிர்வாகத்தின் உரிய அனுமதியின்றிதனியார்இணையதள சேவை வழங்கும் நிறுவனங்கள் (Network) தோண்டி சேதப்படுத்தி வருவதாக பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கடும் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர். பொதுவாக, பெரிய அளவிலான பெருநிறுவனங்கள் (Airtel, Jio Fiber) அல்லது உள்ளூர் இணையதள சேவை வழங்கும் நிறுவனங்கள் (Local Network) கேபிள்களைபூமிக்கடியில் கொண்டு செல்வதற்கு முறைப்படி தகுந்த ஒப்பந்தங்கள் மேற்கொண்டு, நகராட்சிஅல்லதுநகரமைப்பு ஆய்வாளரிடம் (TPI Town Planning Inspector) உரிய அனுமதி பெற வேண்டும். ஆனால், சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் எந்தவித அனுமதியும் பெறாமலும், நகரமைப்பு ஆய்வாளரின் கவனத்திற்கு செல்லாமலும் தார்ச்சாலைகள் கண்டமேனிக்கு தோண்டப்பட்டு வருகின்றன.




பொதுமக்களின் வரிப்பணத்தில் பல லட்சம் ரூபாய் செலவில் போடப்படும் தார்ச்சாலைகள், தனியார் நிறுவனங்களின் சுய தேவைகளுக்காக தோண்டப்படும் போது, மீண்டும்பழையநிலைக்கு சீரமைக்கப்படுவதில்லை.

தோண்டப்பட்ட இடங்கள் அரைகுறையாக மூடி செல்லப்படுவதால், தார்ச்சாலைகள் மண் சாலைகளாக மாறி, ஆங்காங்கே ஆபத்தான பள்ளங்கள் உருவாகின்றன. இதன் காரணமாக தொடர்ச்சியாக சாலைகள் சேதமடைந்து, போக்குவரத்துக்கும் பொதுமக்களின் பாதுகாப்பிற்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைகிறது.

இதுகுறித்து நகராட்சி நிர்வாகத்திடம் கேட்டால், இதற்கும் நகராட்சிக்கும் சம்பந்தமில்லை என அலட்சியமாக பதிலளிப்பதாக சமூக ஆர்வலர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

அதிகாரிகளின் இந்த மெத்தனப்போக்கால், தனியார் நிறுவனங்கள் தங்களின் இஷ்டத்திற்கு சாலைகளை சேதப்படுத்தி வருகின்றன. எனவே, நகராட்சி நிர்வாகம் உடனடியாக தலையிட்டு, கேபிள் பதிக்கும் உள்ளூர் மற்றும் பெரிய இணைய நிறுவனங்கள் அனைத்தும் உரிய அனுமதி பெற்ற பிறகே சாலைகளை தோண்ட வேண்டும் என்பதை உறுதி செய்ய வேண்டும். மேலும், தோண்டி முடித்தவுடன் அந்தச் சாலையை முன்பிருந்தவாறே தரமான தார்ச்சாலையாக சீரமைத்து தர வேண்டும் என்ற கடுமையான உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என்றும், வருங்காலங்களில் இது போன்ற விதிமீறல்கள் நடக்காதவாறு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்களும் பொது மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# செய்யாறு அருகே இறந்த விஏஓ குடும்பத்திற்கு ரூ. 1.50 லட்சம் நிதி உதவி

செய்யாறு,செப்.23

திருவண்ணாமலை மாவட்டம் வெம்பாக்கம் வட்டம் இருமரம் கிராம நிர்வாக அலுவலர் பி. துளசிதரன்( 36), உடல் நிலை பாதிக்கப்பட்டு கடந்த ஆகஸ்ட் மாதம் 4ம் தேதி (04.08.2026) இறந்து விட்டார் இவர் இறப்பிற்கு திருவண்ணாமலை மாவட்டம் தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர்கள் சங்கம் சார்பில் இறந்த கிராம நிர்வாக அலுவலர் பி. துளசிதரன் குடும்பத்திற்கு நமது சங்கத்தின் சார்பில் ரூ. 1,00,000/ மற்றும் வெம்பாக்கம் வட்ட கிளை சார்பில் ரூ.50,000/ என ரூ.1.50 லட்சத்தினை முன்னாள் மாநில பொது செயலாளர் என்.சுரேஷ் முன்னிலையில் மாவட்ட தலைவர் ரமேஷ் தலைமையில் மாவட்ட நிர்வாகிகள்கணேஷ்,சீனுவாசன், கோதண்டராமன், வெங்கடேசன்,வட்டநிர்வாகிகள் கோடீஸ்வரன் ஆனந்தபாபு, சங்கர், தமீன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு நிதியை வழங்கினார்கள்.







திண்டுக்கல் மாவட்டம் பழனிக்கு உட்பட்ட பால சமுத்திரம் ஸ்ரீ ரெங்கநாதர் இளைஞர்கள் ஆன்மீககுழுசார்பாகபுரட்டாசிமுதல்சனிக்கிழமை தினத்தை முன்னிட்டு ஸ்ரீ ரெங்கநாதருக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது அதனை தொடர்ந்து பக்தர்களோடிகளுக்கு சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது

# பழனி டிஎஸ்பி அலுவலகத்தில் மாவட்ட எஸ்.பி. ஜெயக்குமார் ஆய்வு



திண்டுக்கல் மாவட்டம் பழனி துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் இன்று ஆய்வு மேற்கொண்டார். அலுவலக பணிகள், வழக்குகள் மற்றும் காவல்துறை செயல்பாடுகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்து ஆய்வு செய்தார்.



திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஒன்றியம்வேளானந்தல்அரசினர்மேல்நிலைபள்ளியில் 20252026 கல்வியாண்டில் 10 ஆம் வகுப்பு தேர்வில் 100% தேர்ச்சி கொடுத்த ஆசிரியை , ஆசிரியர்களுக்கு மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனிராஜ் பாராட்டி சான்றிதழ் வழங்கினார்.

## இராணிப்பேட்டையில்

# மத்திய, மாநில அரசுகளை கண்டித்து திமுக தொமுச சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

இராணிப்பேட்டை மாவட்டம் முத்துக்கடை பேருந்து நிலையம் அருகே திமுக தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவை கவுன்சில் சார்பில் மத்திய, மாநில அரசுகளை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில், தொழிலாளர் விரோத நான்கு தொகுப்பு சட்டங்களை திரும்பப் பெற வேண்டும், மின்சார சட்டத் திருத்தத்தை கைவிட





வேண்டும், விதை சட்டத் திருத்தத்தை திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. மேலும், பொது விநியோக முறையை வலுப்படுத்த வேண்டும், தூத்துக்குடி அனல் மின்நிலைய விரிவாக்கத்தை தனியாருக்கு வழங்கும் நடவடிக்கையை கைவிட வேண்டும், மின்கல சேமிப்பு அமைப்பை தனியார்மயமாக்கக் கூடாது எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது. போக்குவரத்துத் துறையில் ஆயிரம் மின்சாரப் பேருந்துகளை மொத்தமாக தனியாருக்கு வழங்கும் நடவடிக்கையை கைவிட வேண்டும் என்றும், டாஸ்மாக் தொழிலாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களை குற்றவாளிகளைப் போல் நடத்துவதை கைவிட வேண்டும் என்றும் வலியுறுத்தினர். பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மத்திய, மாநில அரசுகளுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பியபடி தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# இராணிப்பேட்டையில் கூட்டுறவு வங்கி ஊழியர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்

## விவசாய சங்க நிர்வாகி மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்

தமிழ்நாடு மாநில தொடக்ககூட்டுறவுவங்கி அனைத்துப் பணியாளர்கள் சங்கம் சார்பில், ராணிப்பேட்டை முத்துகடை பேருந்து நிலையம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர் சேதுபதி தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் சுந்தர்ராஜன், மாவட்டச்செயலாளர் கமலநாதன், மாவட்டத்துணைத் தலைவர்கள் பொன்னுரங்கன், ராமச்சந்திரன், மாவட்ட இணை செயலாளர்கள் தனசேகர், ஸ்ரீராமன், போராட்டக் குழுத் தலைவர் ரமேஷ் மற்றும் போராட்டக் குழுச் செயலாளர் தட்சிணாமூர்த்தி உள்ளிட்ட நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் கலந்து கொண்டவர்கள் பேசுகையில்

"விவசாய சங்க நிர்வாகி ஈசன் முருகசாமி என்பவர், விவசாய சங்கப் பிரதிநிதி என்ற போர்வையில் சமீபத்தில் ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் பேட்டியளித்துள்ளார். அதில், 'கூட்டுறவு கடன் சங்கப் பணியாளர்கள் கடன் வசூலுக்கு வந்தால் அவர்களைச் செருப்பால் அடிக்க வேண்டும்; செருப்பைக் கழற்றி கூட்டுறவு அலுவலகத்திற்குள் வீச வேண்டும்' என மிகவும் தரக்குறைவாகப் பேசியுள்ளார். கூட்டுறவு ஊழியர்களை வன்முறைக்கு உள்ளாக்கும் வகையிலும், பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையிலும் பேசியுள்ள அவரது பேச்சை வன்மையாகக் கண்டிக்கிறோம். வன்முறையைத் தூண்டும் வகையில் பேசிய ஈசன் முருகசாமி மீது காவல்துறை உடனடியாக உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் கூட்டுறவு வங்கிப் பணியாளர்கள் பலர் கலந்துகொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.




## "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்"

# கடமலைக்குண்டு அரசு மேல்நிலைப்பள்ளியில் பிடிஓ ரவிச்சந்திரன் உணவளித்து தொடக்கம்

தேனி மாவட்டம், கடமலைக்குண்டு மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கடமலைக்குண்டு கிராமத்தில் இயங்கி வரும் அரசு மேல்நிலைப் பள்ளியில், பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டத்தின் கீழ் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு உணவளிக்கும் நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் கடமலைக்குண்டு வட்டார வளர்ச்சி அலுவலர் ரவிச்சந்திரன் அவர்கள் நேரில் கலந்து கொண்டு, மாணவ மாணவிகளுக்கு சத்தான காலை உணவை வழங்கி திட்டத்தை தொடக்கி வைத்தார். இதில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சாந்தி, ஊராட்சி செயலாளர் சின்னச்சாமி, பள்ளி தலைமையாசிரியர், ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். தமிழகத்தில் ஏழை, எளிய குடும்பங்களை சேர்ந்த குழந்தைகள் பசியின்றி பள்ளிக்கு வர வேண்டும், வறுமையின் காரணமாக கல்வி தடைபட்டுவிட கூடாது என்ற தொலை நோக்கு பார்வையுடன் பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் இலவச மதிய உணவுத் திட்டம் முதன்முதலில் அறிமுகப் படுத்தப்பட்டது. இந்திய வரலாற்றிலேயே புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்திய அந்தத் திட்டம், லட்சக்கணக்கான கிராமப்புற குழந்தைகளின் பள்ளி வருகையை உயர்த்தியதோடு, நாட்டின் எழுத்தறிவு விகிதத்தையும் கணிசமாக உயர்த்தியது. அந்தத் வரலாற்று சிறப்புமிக்க திட்டத்தின் தொடர்ச்சியாகவும், அதன் அடுத்த கட்ட பரிணாமமாகவும் தற்போதைய தமிழக முதலமைச்சரால் விரிவுபடுத்தப்பட்டு செயல்பட்டு வரும் காலை உணவுத் திட்டம், மாணவர்களின் ஊட்டச்சத்து நிலையையும் கற்றல் திறனையும் மேம்படுத்துவதில் பெரும் பங்காற்றி வருகிறது.காலை நேரத்தில் அவசர அவசரமாக பள்ளிக்கு வரும் குழந்தைகள் பலர் உணவு அருந்தாமல் வருவதும், அதனால் வகுப்பறையில் கவனக் குறைவு மற்றும் சோர்வு ஏற்படுவதையும் உணர்ந்து இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.





காமராஜரின் வழியில் ஏழை மாணவர்களின் கல்வி நலனை முதன்மையாக கொண்டு செயல்படுத்தப்படும் இத்திட்டம், இன்று கடமலைக் குண்டு அரசு மேல்நிலைப் பள்ளியிலும் திறம்பட தொடக்கி வைக்கப்பட்டுள்ளது. உணவை பெற்றுக் கொண்ட மாணவமாணவிகள் மிகவும் மகிழ்ச்சியோடு உட்கொண்டதுடன், அரசின் இந்த உயரிய முயற்சிக்கு தங்களது நன்றியினையும் தெரிவித்து கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப. அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம். செய்யூர் ஊராட்சியிலுள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுமேற்கொண்டார். உடன்துணைமேலாளர்மணிகண்டன், கொள்முதல்அலுவலர்ரவிச்சந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.

தேச பக்தி



# தீபாவளி பட்டாசுக் கடைகளுக்கு உரிமம் பெற அக்.18 கடைசி நாள் - ஆட்சியர் வந்தனா கார்க் அறிவிப்பு

திருவண்ணாமலை, செப்.23

திருவண்ணாமலை மாவட்டத்தில் வரும் 08.11.2026 அன்று தீபாவளி பண்டிகை கொண்டாடப்பட உள்ளதை முன்னிட்டு, கிராமப்புறம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் தற்காலிக பட்டாசுக் கடைகள் அமைத்து விற்பனை



செய்ய விரும்புவோர், வெடிபொருட்கள் சட்டம், 1884 மற்றும் வெடிபொருட்கள் விதிகள், 2008ன் விதி 84ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு இணையதளம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

தற்காலிக பட்டாசுக் கடை உரிமம் கோரும் விண்ணப்பங்களை 19.09.2026 முதல் 18.10.2026 வரை திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து இசேவை மையங்களிலும் இணையதளம் மூலம் பதிவு செய்யலாம்.

விண்ணப்பத்துடன் விண்ணப்பதாரரின் கடவுச்சீட்டு அளவு புகைப்படம், இருப்பிட முகவரி அல்லது பட்டாசுக் கடை அமைக்கப்படும் இடத்திற்கான முகவரிச்சான்று, PAN அட்டை, ஆதார் அட்டை, வாக்காளர் அடையாளஅட்டை அல்லது ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று இணைக்க வேண்டும்.

மேலும், ரூ.600 உரிமக் கட்டணம் செலுத்தியதற்கான அசல் மின்னணு செலுத்துச் சீட்டு, சொந்தக் கட்டிடம் எனில் பட்டா நகல், வாடகைக் கட்டிடம் எனில் உரிமையாளர் சம்மதத்துடன் கூடிய வாடகை ஒப்பந்தப் பத்திரம், குத்தகை நிலம் எனில் குத்தகை ஆவணம், சொத்து வரி ரசீது,

சுய உறுதிமொழிப் பத்திரம் மற்றும் A4 அளவில் கட்டிடம் அமைவிட வரைபடம் அல்லது கட்டிடத் திட்ட அனுமதி ஆகியவற்றை தவறாமல் இணைக்க வேண்டும். உரிமக் கட்டணத்தை IF HRMS அரசு கணக்குத் தலைப்பில் இணையதளம் மூலம் செலுத்த வேண்டும். *Department Code – 02301, Receipt Type – Temporary Cracker Licence, Sub Type – Temporary Cracker Licence – Service Charges, Account Code – 007060103AA22799,* கட்டணம் – ரூ.600 என தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டு, தகுதி மற்றும் விதிமுறைகளின்படி சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட்ட பின்னர் தற்காலிக பட்டாசு விற்பனை உரிமம் வழங்கப்படும். உரிமம் தொடர்பான ஆணையை மனுதாரர்கள் இணையதளம் வாயிலாக பெற்றுக்கொள்ளலாம். இந்த தற்காலிக உரிமத்தின் செல்லுபடியாகும் காலம் 30 நாட்கள் ஆகும்.

18.10.2026க்குப்பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள்எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

உரிமம் பெறாமல் பட்டாசு விற்பனை செய்வது கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எனவே, தற்காலிக பட்டாசுக் கடை அமைக்க உரிமம் கோரி விண்ணப்பிப்ப வர்கள், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையிலும், பாதுகாப்பான முறையிலும், விபத்துகள் ஏற்படாத வகையிலும் உரிய இடத்தைத் தேர்வு செய்து விண்ணப்பிக்க வேண்டும்.

தீபாவளி பண்டிகையை பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் கொண்டாட மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஆட்சியர் வந்தனா கார்க் கேட்டுக்கொண்டுள்ளார்.



திண்டுக்கல்மாவட்டகாவல்கண்காணிப்பாளர் திரு. S. ஜெயக்குமார், இ.கா.ப. கொடைக்கானல் காவல் நிலையத்தை ஆய்வு மேற்கொண்டார்கள்.

# பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தை ஆய்வு செய்த எம்.எல்.விஜய் பிரபு MLA





செங்குன்றம், செப்டம்பர் 23:

தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தை சென்னை திருவான்மியூர் காந்திரபுரத்தில் துவக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து இத்திட்டத்தின் செயல்பாடுகள் முறையாக நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், மாதவரம் தொகுதி புழல் பொப்பிலிராஜா அரசு மேல்நிலைப்பள்ளியில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட செயலாளருமான எம்.எல். விஜய்பிரபு நேரில் சென்று பள்ளியில் நடைபெறும் காலை உணவு வழங்கும் பணிகள், உணவின் தரம், சுகாதாரம் மற்றும் மாணவர்களுக்கான ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்தார்.

# புழல் ஒன்றிய திமுக சார்பில் மதுராந்தகம் இடைத்தேர்தலில் தீவிர வாக்கு சேகரிப்பு



செங்குன்றம், செப்டம்பர் 23:

திமுக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்ஆணைக்கிணங்க, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின்படியும் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் ஆலோசனைபடி புழல் ஒன்றிய தி.மு.க சார்பில் மதுராந்தகம் இடைத்தேர்தலை முன்னிட்டு அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் செம்பூண்டி கிராமத்தில் திமுக வேட்பாளர் வழக்கறிஞர் ஐ.பரந்தாமனை ஆதரித்து புழல் ஒன்றிய செயலாளர் வடகரை ச.அற்புதராஜ் தலைமையில் உதயசூரியன்சின்னத்தில் வீடு வீடாகச் சென்று தீவிர வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.




தேனிமாவட்டகாவல்துறையில்புதியவாக்கிடாக்கிதொழில்நுட்பவசதிகளுடன் கூடிய DMR (Digital Mobile Radio Communication) தொழில்நுட்பம் இன்று அறிமுகப்படுத்தப்பட்டது.இந்நிகழ்வில் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. K.S. பிரவீன் கௌதம், இ.கா.ப., அவர்கள் மாவட்ட காவல் அலுவலகத்தில் இயங்கும் தொழில்நுட்ப பிரிவு அலுவலகத்தில் புதிய வாக்கி டாக்கி தொடர்பு தொழில்நுட்பத்தை துவக்கி வைத்தார்.



திண்டுக்கல் மாவட்டம் பழனிக்கு வரும் பக்தர்கள் பார்க்கிங் வசதி இல்லாமல் குளத்து ரோடு சாலையில் தங்களது வாகனங்களை ரோட்டிலே நிறுத்துகின்றன இதற்குளதற்குபார்க்கிங்கட்டணம்செலுத்தவேண்டும் என ஆதங்கத்துடன் வாகன ஓட்டிகள் கேட்கின்றனர் மேலும் வாகன ஓட்டுனர்களுக்கு சரியான பார்க்கிங் வசதி உள்ள தகவல் கிடைக்கவில்லை மேலும் பேருந்து செல்லவும் மற்றும் வாகனங்கள் செல்லவும் மிகவும் சிரமத்துக்குள்ளாகின்றன இதற்கு சரியான பார்க்கிங் வசதி செய்து தரும்படி வாகன ஓட்டிகள் மற்றும் பக்தர்கள் சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ந. ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களிடம் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசின் 100 நாள் சாதனை மலர் மற்றும் காலப்பேழை புத்தகங்கள் வழங்கப்பட்டது.

## திருவத்திபுரம் நகராட்சியில் திடீர் சோதனை:

# அலுவலகத்தை பூட்டி லஞ்ச ஒழிப்புத்துறை அதிரடி நடவடிக்கை

செய்யாறு,செப்.23

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு திருவத்திபுரம் நகராட்சி அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் இன்று திடீரென சோதனை மேற்கொண்டதால் நகராட்சி வளாகத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

திருவண்ணாமலை மாவட்ட லஞ்ச ஒழிப்புத் துறை காவல் ஆய்வாளர் அருள்பிரசாத் தலைமையில் 5 பேர் கொண்ட குழுவினர் இந்த சோதனையில் ஈடுபட்டுள்ளனர். மதியம் 3.30 மணி முதல் நகராட்சி அலுவலகத்தில் தீவிரமாக சோதனை நடைபெற்று வருகிறது.

சோதனையின்போது நகராட்சி பணியாளர்களின் செல்போன்களை லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் பெற்றுக் கொண்டு, அலுவலக அறைகள், பணியாளர்கள்பயன்படுத்தும் வாகனங்கள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், நகராட்சி அலுவலகத்தின் பிரதான வாயில் மூடப்பட்டு, வெளிநபர்கள் உள்ளே செல்லாத வகையில் சோதனை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அலுவலக வளாகத்தில் உள்ள ஆவணங்கள் மற்றும் அலுவலகப் பயன்பாடு தொடர்பான பதிவுகளும் அதிகாரிகளின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. சோதனை நிறைவடைந்த பின்னரே அதிகாரப்பூர்வமாக என்னென்ன ஆவணங்கள் அல்லது கணக்கில் வராத பணம் ஏதேனும் கைப்பற்றப்பட்டதா என்பது குறித்து தெரியவரும். இதனால் நகராட்சி அலுவலகம் மற்றும் அதன் சுற்றுப்பகுதியில் பரபரப்பான சூழல் நிலவி வருகிறது.




# ராணிப்பேட்டையில் விஸ்வகர்மா ஜெயந்தி விழா

இராணிப்பேட்டை மாவட்டம் வானாபாடி ரோடு களர் பகுதியில் VSK தமிழ்நாடு விஸ்வகர்மா சங்கம் ஜெயந்தி விழா நடைபெற்றது.இந்த விழாவில் ஹரிதாஸ் அனைவரையும் வரவேற்றார். கௌரவத் தலைவர் கோவிந்தராஜ் மாநிலத் தலைவர் சீனிவாசன் மாநிலத் துணைத் தலைவர் முனுசாமி மாநில பொதுச் செயலாளர் சந்தானம்மாநில பொருளாளர் ராஜசேகர் இளைஞர் அணி தலைவர் சௌந்தர் ஆகியோர்தலைமைதாங்கினார்இதில் சிறப்பு அழைப்பாளராக காந்தி பங்கேற்று இனிப்பு மற்றும் அன்னதானம் வழங்கினார். மேலும் இதில் பரத் ,வரதராஜ் உமாபதி, வேணுகோபால்,சீனிவாசன், சாந்தகுமார் ,விக்னேஷ், கோமதி ,நேதாஜி மோகனம் மற்றும் ஏராளமான கிராம பொதுமக்கள் பங்கேற்றனர்.





தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும்பள்ளிகளில்6ஆம்வகுப்பு முதல்8ஆம்வகுப்புவரைபயிலும்மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில், இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ள "பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம்" விரிவாக்கத்தின் கீழ், திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தோட்டனூத்து ஊராட்சியிலுள்ள நல்லமநாயக்கன்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி மாணாக்கர்களுக்கு காலை உணவினை, மாவட்ட ஆட்சித் தலைவர் துர்காமூர்த்தி, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம் முன்னிலையில் வழங்கி தொடங்கி வைத்து, மாணாக்கர்களுடன் அமர்ந்து காலை உணவு அருந்தினார்.

## மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.வைத்திநாதன் தலைமையில்

# தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் சூரிய ஒளி மின் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த மாவட்ட அளவிலான குழுக் கூட்டம்

தேனி மாவட்டத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டை அதிகரிக்கும் நோக்கில், நகர்ப்புற மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் இத்திட்டத்தைப் பரவலாக்க, பெரிய அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் புதிதாக விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் மற்றும் நகராட்சி நிர்வாகம் இணைந்து முதற்கட்டமாக சிறப்புப் பதிவு முகாம்களை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் ஒரே இடத்தில் பல மின் பயனீட்டாளர்கள் இத்திட்டத்திற்கு எளிதாக விண்ணப்பித்து பயன்பெற முடியும்.

இத்திட்டத்தின்கீழ், 3 கிலோவாட் (3 KW) வரையிலான வீட்டு உபயோக சூரியசக்தி கட்டமைப்புகளுக்கு மத்திய அரசின் சார்பில் அதிகபட்சமாக ரூ.78,000/ வரை மானியம் வழங்கப்படுகிறது. மேலும், இத்துடன், மாநில அரசின் கூடுதல் மானியமாக ரூ.22,000/ வரை வழங்கப்படுகிறது. இதன்மூலம் பொதுமக்கள் மிகக் குறைந்த முதலீட்டில் இத்திட்டத்தைப் பெற முடியும். எஞ்சிய தொகைக்கு வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் கடன் வசதி பெற்றுத்தரவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆகையால், பொதுமக்கள் இந்த பசுமை ஆற்றல் திட்டத்தைப் பயன்படுத்தி, தங்களின் மின்சாரக் கட்டணத்தைக் குறைத்துக் கொள்வதோடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் பங்களிக்கலாம். இத்திட்டம் குறித்த கூடுதல் விவரங்களுக்கு பொதுமக்கள் தங்கள் பகுதிகளிலுள்ள மின்வாரிய அலுவலகங்களை அணுகலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, சூரிய ஒளி மின்கட்டமைப்பு (Rooftop Solar) மற்றும் நெட்மீட்டரிங் (Net Metering) வசதிகளை விரைவுபடுத்துவது குறித்து தொழில்நுட்ப விளக்கம் அளிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ப.ராஜகுமார், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திரு. துஷார்ஸ்ரீஹர்ஷிண்டே, இ.வ.ப, மேற்பார்வைப் பொறியாளர் (மின்சாரத்துறை) திரு. நடராஜன், உதவி செயற்பொறியாளர்கள் திரு.முருகேசன், திரு.உமாகாந்த் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சூரியசக்தி உபகரண விற்பனையாளர்கள், வங்கியாளர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கே.ஜி.எஃப் புதிய ரயில்வே மேம்பாலத்திற்காக வீடுகள் இடிப்பு;எங்களுக்கு எந்த ஆதரவும் இல்லை

## கண்ணீருடன் போராடிய ஊரிகம் மக்கள்

கே.ஜி.எஃப்,செப்.23

ஒருபுறம் போக்குவரத்து நெரிசலுக்கு நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு... மறுபுறம், அந்த வளர்ச்சிப் பணிக்காக தங்களது வீடுகளை இழந்து நிற்கும் குடும்பங்களின் கண்ணீர்!

கே.ஜி.எஃப் பகுதியில் புதிய ரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணிகளுக்காக, ஊரிகம் பகுதியில் வீடுகளை அகற்றும் பணி இன்று காலை தொடங்கியது. இதனால் அப்பகுதியில் வசித்து வந்த பொதுமக்கள் அதிர்ச்சியிலும் வேதனையிலும் தவித்தனர்.

பல ஆண்டுகளாக வாழ்ந்த வீடு... குடும்பத்தின் நினைவுகள் நிறைந்த இடம்... குழந்தைகள் வளர்ந்த வீடு... இன்று இடிக்கப்படும் நிலை!

வீடுகளில் இருந்த பொருட்களை அவசரமாக வெளியே எடுத்துச் செல்லும் காட்சிகள் அப்பகுதியில் காணப்பட்டன. ஒருபுறம் வீடுகளை அகற்றும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்க, மறுபுறம் தங்களது வாழ்விடத்தை இழக்கும் வேதனையில் பொதுமக்கள் கண்ணீருடன் போராடினர்.

“மேம்பாலம் கட்டுவது எங்களுக்கு எதிரானது அல்ல...

ஆனால் எங்கள் வீடுகளை இழந்த பிறகு எங்களுடைய நிலை என்ன?” என்பதுதான் பாதிக்கப்பட்ட மக்களின் முக்கிய கேள்வியாக உள்ளது.

கண்ணீரோடு கேட்கும் கேள்வி...

பல ஆண்டுகளாக இந்தப் பகுதியில் வசித்து வந்ததாக கூறும் பொதுமக்கள், திடீரென தங்களது வாழ்விடத்தை இழக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக வேதனை தெரிவித்தனர். “எங்களுக்கு எந்த ஆதரவும் இல்லை... எங்களுடைய நிலையை யாரும் கேட்கவில்லை...” என்று சிலர் கண்ணீருடன் தெரிவித்தனர்.

வீட்டை காலி செய்ய வேண்டிய சூழ்நிலையில், வீட்டு உபயோகப் பொருட்கள் முதல் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருட்கள் வரை வாகனங்களில் ஏற்றப்பட்டன.



ஒரு குடும்பத்திற்கு வீடு என்பது வெறும் கட்டிடம் அல்ல...

அது அவர்களின் வாழ்க்கை. அவர்களின் பாதுகாப்பு.அவர்களின் நினைவுகள்.அவர்களின் எதிர்காலம்.

அப்படிப்பட்ட ஒரு வீட்டை சில மணி நேரங்களில் காலி செய்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டால், அந்த குடும்பத்தின் மனநிலை எப்படி இருக்கும் என்பதற்கு ஊரிகம் பகுதியில் இன்று காணப்பட்ட காட்சிகளே சாட்சி.

வளர்ச்சி வேண்டும்... ஆனால் மக்களின் கண்ணீருக்கும் தீர்வு வேண்டும்!

கே.ஜி.எஃப் நகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், பொதுமக்களின் பயணத்தை எளிதாக்கவும் புதிய ரயில்வே மேம்பாலம் முக்கியமான கட்டமைப்பு பணியாக பார்க்கப்படுகிறது.

ஆனால் அந்தப் பணிக்காக வீடுகளை இழக்கும் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் எதிர்காலம் குறித்த கேள்விகளும் அதே நேரத்தில் எழுகின்றன.

மேம்பாலம் உயர வேண்டும்... சாலைகள் விரிவடைய வேண்டும்... போக்குவரத்து நெரிசல் குறைய வேண்டும்...

அதே நேரத்தில், அந்த வளர்ச்சிக்காக தங்களது வீடுகளை இழக்கும் குடும்பங்களின் குரலும் கேட்கப்பட வேண்டும் என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

வீடுகளை அகற்றும் பணி தொடங்கிய இந்த காலை நேரம், சிலருக்கு ஒரு சாதாரண கட்டுமானப் பணியின் தொடக்கமாக இருக்கலாம்.

ஆனால் அந்த வீடுகளில் வாழ்ந்த குடும்பங்களுக்கு...

அது அவர்களின் வாழ்க்கையில் ஒரு அதிர்ச்சியான நாள்.

அதிகாரிகளிடம் பொதுமக்களின் எதிர்பார்ப்பு

வீடுகளை இழக்கும் குடும்பங்களின் நிலையை அதிகாரிகள் நேரடியாக கேட்டறிந்து, அவர்களுக்கு தேவையான சட்டப்பூர்வ நடவடிக்கைகள், உரிய இழப்பீடு அல்லது மறுவாழ்வு தொடர்பான விஷயங்களில் தெளிவான தகவல்களை வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

“எங்கள் வீடு போய்விட்டது... இனி எங்கள் வாழ்க்கை எங்கே?”

என்ற கேள்வி, இன்று ஊரிகம் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீரோடு ஒலித்தது.

வளர்ச்சி என்பது கட்டிடங்களையும் பாலங்களையும் உருவாக்குவது மட்டுமல்ல... அந்த வளர்ச்சியின் பாதையில் வாழும் மக்களின் வாழ்க்கையையும் பாதுகாப்பதுதான் உண்மையான வளர்ச்சி.

கே.ஜி.எஃப் புதிய ரயில்வே மேம்பாலம் பொதுமக்களின் நீண்ட நாள் போக்குவரத்து பிரச்சினைக்கு தீர்வாக அமையுமா?

அதே நேரத்தில், வீடுகளை இழந்து தவிக்கும் குடும்பங்களின் கண்ணீருக்கும் உரிய தீர்வு கிடைக்குமா?

இந்தக் கேள்விகளுக்கான பதிலை எதிர்பார்த்து ஊரிகம் மக்கள் காத்திருக்கின்றனர்.

“மேம்பாலம் வரட்டும்... ஆனால் எங்கள் வீடுகளின் கண்ணீரை மறந்துவிடாதீர்கள்!”

இதுவே இன்று ஊரிகம் மக்களின் வேதனைக் குரல்.

தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779



தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் சென்னையில், பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் விரிவாக்கத்தினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம். மோசூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டம் விரிவாக்கம் தொடக்க விழாவில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் வ.காந்திராஜ் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு காலை உணவுத்திட்டம்விரிவாக்கத்தினைதொடங்கிவைத்து.மாணவமாணவியர்களுடன் அமர்ந்து உணவருந்தினார். உடன் மாவட்ட ஆட்சியர் ந.ப்ரியா ரவிச்சந்திரன். இ.ஆ.ப., திட்ட இயக்குநர்கள் ச.செல்வராணி (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பெரியசாமி (மகளிர் திட்டம்). வருவாய் கோட்டாட்சியர் ரமேஷ் மற்றும் பலர் உள்ளனர்.

### திருவண்ணாமலையில்

# தனித்தேர்வர்களுக்கு தொழிற்தேர்வு வாய்ப்பு

## நவம்பர் 26ல் முதனிலை எழுத்துத் தேர்வு

திருவண்ணாமலை மாவட்டம் 2027 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின்கீழ், பயிற்சி தலைமை இயக்ககம் (DGT) நடத்தும் அகில இந்திய தொழிற்தேர்வில் தனித்தேர்வர்களாக (Private Candidates) பங்கேற்க தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தனித்தேர்வராக விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவம், முழுமையான விளக்கக் குறிப்பேடு மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதற்கான வழிகாட்டுதல்களை www.skilltraining.tn.gov.in என்ற இணையதளத்தில்பதிவிறக்கம்செய்து கொள்ளலாம்.

தேர்வுக் கட்டணமாக ரூ.200 செலுத்த வேண்டும். இதனை www.karuvoolam.tn.gov.in இணையதளத்தின் மூலம் eChallan வழியாக செலுத்தி, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் உரிய ஆவணங்களை இணைத்து, விளக்கக் குறிப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்ட அரசினர் தொழிற்பயிற்சி நிலைய (Nodal Govt. ITI) முதல்வரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

தகுதியான விண்ணப்பதாரர்களுக்கான முதனிலைத் தேர்வு எழுத்துத் தேர்வு (Theory) 26.11.2026 அன்று கிண்டி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறும். எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு மட்டும் 27.11.2026 அன்று செய்முறைத் தேர்வு நடைபெறும்.

தனித்தேர்வராக விண்ணப்பிக்க 21.09.2026 முதல் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை சமர்ப்பிக்க 09.10.2026 கடைசி நாளாகும். அதன் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இதுதொடர்பான முழுமையான வழிகாட்டுதல்களை www.skilltraining.tn.gov.in இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம் எனதிருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

இறப்புக்கு முன் ரத்த தானம்
இறப்புக்கு பின் கண் தானம்



திண்டுக்கல் மாவட்டம் பழனி ஸ்ரீதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ரோப் கார்60 நாளுக்கு மேல் ரோப்கார்சேவை பராமரிப்பு பணி நடைபெற்றது நடைபெற்ற பிறகு சோதனை ஓட்டங்கள் சில தினங்கள் ஓட்டி பார்க்கப்பட்டது சோதனை ஓட்டங்கள் நிறைவடைந்த உடன் ரோம்கா சேவை மீண்டும் பக்தர்களுக்காக பயன்பாட்டுக்கு வந்துள்ளது

# இதர பிற்படுத்தப்பட்டோர். பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள், சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கான மத்திய அரசின் கல்வி உதவித்தொகை திட்டம்

ராணிப்பேட்டை மாவட்டம் செப் 23

202627 ஆம் ஆண்டிற்கு தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் அறிவிக்கப்பட்டுள்ள சிறந்த செயல்பாடு கல்வி நிறுவனம் (100% தேர்ச்சி பெற்றுள்ள) பள்ளிகளில் நடப்பாண்டில் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் தமிழகத்தைச் சார்ந்த தகுதியான மாணவ மாணவியர்கள் கல்வி உதவித்தொகை (புதுப்பித்தல் புதியது) திட்டத்தில் தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் (https://scholarships.gov.in) விண்ணப்பிக்கலாம். என்று இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.




இத்திட்டத்தில் கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணமாக ஆண்டொன்றுக்கு அதிகபட்சமாக 9 10 ஆம் வகுப்பு பயில்பவருக்கு ரூ.75,000 மற்றும் 11 12 ஆம் வகுப்பு பயில்பவருக்கு ரூ.1,25,000 வரை உதவித்தொகையாக ஒன்றிய அரசால் வழங்கப்படும். 30% மாணவியர்களுக்கு இத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிபந்தனைகள்

மாணவ மாணவியர் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினர் (EBC) அல்லது சீர்மரபினர் (DNT) பிரிவைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

வருமான வரம்பு குடும்பத்தின் மொத்த ஆண்டு வருமானம் ரூ.250 இலட்சத்திற்குமிகாமல் இருக்க வேண்டும்.

202528 ஆம் கல்வியாண்டில் 100% தேர்ச்சி பெற்று தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ள பட்டியலில் இடம்பெற்றுள்ள பள்ளிகளில் பயில்பவராக இருத்தல் வேண்டும். புதுப்பித்தல்

இத்திட்டத்தில் கடந்த நிதியாண்டில் (2025.26) கல்வி உதவித்தொகை பெற்று பயனடைந்த மாணவ மாணவியர்கள் நடப்பாண்டில் (202627) 10ஆம் வகுப்பு மற்றும், 12 ஆம் வகுப்பு விண்ணப்பித்தினை தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் உறுதிசெய்து (https://scholarships.gov.in)புதுப்பித்தல் கல்வி உதவித்தொகை படிவத்தை இணைப்பில் பூர்த்தி செய்து 30.09.2026க்குள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளாப்படுகிறது. இணையத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களை தத்தம் பள்ளி தலைமை ஆசிரியர் விண்ணப்பங்கள் சரியார்ப்பதற்கான புதுபித்தல் கடைசி நாள் 15.10.2026 புதியது (202627) புதியதாக விண்ணப்பிக்க விரும்பும் 9 மற்றும் 11 ஆம் வகுப்புகளில் பயிலும் தகுதியுள்ள மாணவ மாணவியர்களுக்கு விண்ணப்பிப்பதற்கான தேதி NSP இணையத்தில் அறிவிக்கப்படும்.

மேலும், இத்திட்டம் தொடர்பான கூடுதல் விபரங்கள் அறிந்திட National Scholarship (https://scholarships.gov.h) மற்றும் மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் இணையதளத்தினை (http://socialjusticegov.in)

அறிந்துக் கொள்ளலாம். தகுதியான மாணவ மாணவியர்கள் இத்திட்டத்தில் விண்ணப்பித்து பயனடையுமாறு இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் ப்ரியா ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

### 100% தேர்ச்சி சாதனை:

# திருவண்ணாமலையில் 2,545 ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா; சிறந்த ஆசிரியர்களே தலைசிறந்த சமூகத்தை உருவாக்க முடியும்

## ஆட்சியர் வந்தனா கார்க் பேச்சு

திருவண்ணாமலை மாவட்டம் மார்ச் 2026ல் நடைபெற்ற 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 சதவீத தேர்ச்சி சாதனைக்கு பங்களித்த ஆசிரியர்களை பாராட்டும் விழா திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. இதில் 2,545 ஆசிரியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



திருவண்ணாமலை மாவட்டத்தில் 2025–2026ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற பொதுத்தேர்வில் 100 சதவீத தேர்ச்சி பெற்ற 65 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 12 மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு கேடயம் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மேலும், தமிழ் பாடத்தில் 100 மதிப்பெண் பெற்ற 5 மாணவர்களும், தங்கள் பாடப்பிரிவில் 100 சதவீத தேர்ச்சியை பெற்றுத்தந்த 1,193 முதுகலை ஆசிரியர்கள்மற்றும் 1,352 பட்டதாரி ஆசிரியர்களும் பாராட்டப்பட்டனர்.

விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் பேசியதாவது:

“சிறந்த ஆசிரியர்களே தலைசிறந்த சமூகத்தையும், சிறந்த எதிர்காலத்தையும் உருவாக்க முடியும். நமது மாவட்டத்தின் எதிர்காலம் மாணவர்களிடமே உள்ளது.

அவர்கள் கல்வியில் சிறந்து விளங்கி உயரிய நிலையை அடைவதில் ஆசிரியர்களின் பங்கு மிகவும் முக்கியமானது. மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மாணவர்கள் தங்களது கனவுகளை நனவாக்க ஆசிரியர்கள் தொடர்ந்து ஊக்கமளித்து, கல்வியில் அவர்களுக்கு அதிக ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்.

வரும் கல்வியாண்டுகளில் மேலும் அதிகமான மாணவர்கள் 100 சதவீத தேர்ச்சி பெற ஆசிரியர்கள் தொடர்ந்து உறுதுணையாக செயல்பட வேண்டும்” என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முனிராஜ், திருவண்ணாமலை மற்றும் செய்யாறு மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் பள்ளிக் கல்வித் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




திண்டுக்கல் மாவட்டம் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் பரவி வரும் காய்ச்சலுக்கு முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை மலைகோயிலுக்குவரும்பக்தர்களுக்குநிலவேம்புகுடிநீர்பழனிதேவஸ்தானத்துக்கு உட்பட்ட மலைக்கோயில் சித்த மருத்துவமனை சார்பாக நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA